


PIN news
# தினப்புயல்
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




## இன்று பாடசாலைகள் ஆரம்பம்

அனைத்து அரச பாடசாலைகளும் பாடசாலை தவணை அட்டவணையின்படி இன்று (17) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் தேசிய பாடசாலைகளில் இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான புதிய சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளநிலையில் கல்வி அமைச்சு இடைநிலை வகுப்புகளுக்கான அனுமதி கடிதங்களை வழங்காது என தெரிவிக்கப்படுகின்றது.

## அடையாள உண்ணாநோன்புப் போராட்டம் நிறைவுக்கு வந்தது



தமிழர் மரபுரிமைகளைப் பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் மேற்கொள்ளப்பட்ட அடையாள உண்ணாநோன்புப் போராட்டம் பழரசம் வழங்கப்பட்டு முடித்து வைக்கப்பட்டது.

தமிழர் மரபுரிமைகளைப் பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் அடையாள உண்ணாநோன்புப் போராட்டமும் கையெழுத்துப் போராட்டமும் நல்லூரில் ஆரம்பமாகியது. ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஏற்பாட்டில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் முன்பாக நேற்று (16) காலை 9 மணி அளவில் இப்போராட்டம் ஆரம்பமாகி நடைபெற்ற நிலையில் 3.30 மணி அளவில் பழரசம் வழங்கப்பட்டு உண்ணாநோன்பு முடித்து வைக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள், தென்கயிலை ஆதீன முதல்வர் அகத்தியர் அடிகளார், சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள், யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம், பாராளுமன்ற உறுப்பினர்களான க.வி.விக்னேஸ்வரன், சி.சிறிதரன், த.சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிறேமச்சந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், அகில இலங்கை சைவ மகா சபை, தமிழ்ச் சைவப் பேரவை மற்றும் சமய அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிறிஸ்தவ மதத் தலைவர்கள், அரிசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

**5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்த அடையாள உண்ணா நோன்புப் போராட்டம் இடம்பெற்றது.**

அழிக்கப்பட்ட வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவில் சிவலிங்கம், தெய்வ சிலைகள் உடனடியாக மீள் நிர்மாணம் செய்யப்படவேண்டும். நீதியான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.

குருந்தூர் மலை, கன்னியா வெந்நீரூற்று ஆதி சிவன் வழிபாட்டு உரிமைகள் உடனடியாக மீள வழங்கப்படுவதுடன் புதிய பௌத்த கட்டுமானம் மற்றும் பௌத்த தொல்லியல் புதிய வர்த்தமானி இரத்து நடைமுறையில் செயற்படுத்தப்படவேண்டும்.

இனமதநல்லிணக்கத்தைசீர்குலைக்கும்தமிழர் தாயகத்தின் தொன்மங்களை, மரபுரிமைகளை மாற்றியமைக்கும் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

மட்டு. மயிலத்தனைமடு மேய்ச்சல் தரையில் பெரும்பான்மை இன மக்களின் ஆக்கிரமிப்புக்கள் சகலதும் நிறுத்தப்பட்டு தமிழ் பண்ணையாளர்களின் மரபுரிமையான மேய்ச்சலுக்கான வாழ்வுரிமை உறுதிப்படுத்தவேண்டும்.

போருக்கு பிந்திய இன மதப்பரம்பலை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட பாரிய குடியேற்றம் உள்ளிட்ட செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் ஆகிய பிரதான கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீடு தொடர்பில் இன்று முக்கிய தீர்மானம்



பண்டிகைக் காலத்திற்காக அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீட்டை தொடர்ந்தும் பேணுவது குறித்து இன்று (17) தீர்மானிக்கப்படும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 4 ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறாயினும் நாளை (18) முதல் மீண்டும் முன்னர் வழங்கப்பட்ட அளவிலேயே எரிபொருள் ஒதுக்கீட்டை வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதிகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டை அதே முறையில் பேணுவதா அல்லது முந்தைய ஒதுக்கீடு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பது குறித்து இறுதி உடன்பாடு எட்டப்படவில்லை என்று எரிசக்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலய கத்தார் நாட்டுக் கிளை அங்குரார்ப்பணம்



கல்முனை கல்வி வலய கமு/ கமு இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தின் கத்தார் வாழ் பழைய மாணவர் மற்றும் நலன் விரும்பிகளுக்கான அமையத்தின் இப்தார் நிகழ்வும், பொதுக் கூட்டமும் கத்தார் முன்தஸா பூங்கா வெளியில் மௌலவி ஏ.பீ.எம்.றிணோஸ் (ஹாமி) அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு கடல் கடந்து வாழும்பழையமாணவர்மற்றும்நலன் விரும்பிகள் அனைவரும்ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும் என்று குறிப்பிட்டதுடன் நிர்வாகப் பொறுப்புகளும் அதன் வகிபாகங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. அதன் பின்னர் எம்.டீ.எம்.இஜாஸ் அவர்களினால் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தின் பழைய மாணவர் மற்றும் நலன் விரும்பிகளுக்கான அமையத்தின் நோக்கம் பற்றி விபரிக்கப்பட்டது. அதன் பின்னர் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதில் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தின் பழைய மாணவர் மற்றும் நலன் விரும்பிகளுக்கான அமையத்தின் தற்காலிக நிர்வாகமொன்றை தெரிவுசெய்ய வேண்டும் என எச்.எம்.பஸ்மீர் முன்மொழிந்தமையை அடுத்து மூன்று மாத காலத்திற்கான தற்காலிக நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபர் ஏ.ஜீ. எம்.றிஷாத் அவர்களை தலைவராகக்கொண்ட நிர்வாகத்தின் உப தலைவராக எம்.டீ.எம். இஜாஸ் மற்றும் செயலாளராகவும், ஊடக பொறுப்பாளராகவும் மௌலவி ஏ.பீ.எம்.றிணோஸ் (ஹாமி) ஆகிய இருவரும் சபையோர்களினால் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் பொருளாளராக என்.எம்.அஸ்மி, உப செயலாளராகவும், உதவி ஊடக பொறுப்பாளராகவும் எம்.டீ.எம்.இனாஸ், உப பொருளாளராக கே.எம்.றிஸ்கான், ஒருங்கிணைப்பாளராக என்.எம். நிஜாத் மற்றும் உறுப்பினர்களாக எம்.பஷீர், எம்.றியாழ், ஜே.எம்.றிஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும், கத்தார் வாழ் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தின் பழைய மாணவர் மற்றும் நலன் விரும்பிகளுக்கான அமையத்தின் ஆலோசனை சபைத் தெரிவும் இடம்பெற்றது. அதனடிப்படையில் எச்.எம்.பஸ்மீர், ஏ.லுக்மான், ஏ.ஆர். றியாத், ஜே.நிஜாமுதீன், எப்.எம்.ஹஸ்மி, எஸ்.எல்.றியாஸ், யூ.எல்.நியாஸ்கான் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இறுதியாக நன்றியுரையை அமையத்தின் உப தலைவர் எம்.டி.எம்.இஜாஸ் நிகழ்த்தினார். **(நூருல் ஹுதா உமர்)**

## இந்த ஆண்டின் சூரிய கிரகணம்



2023 ஆம் ஆண்டின் முதல் சூரிய கிரகணம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஏற்படவுள்ளது. ஆண்டின் முதல் சூரிய கிரகணம், ஏப்ரல் 20 ஆம் திகதி காலை 7.04 முதல் மதியம் 12.29 வரை ஏற்படவுள்ளது. முற்பகல் 9.46 இற்கு சூரிய கிரகணத்தின் உச்ச நிலையை அடையவுள்ளது.

தென்கிழக்கு ஆசியா, அவுஸ்திரேலியா, பசுபிக் பெருங்கடல் பகுதி, இந்தியப் பெருங்கடல் பகுதி, அண்டார்டிக்கா ஆகிய பகுதிகளில் பகுதி கிரகணம் தென்படவுள்ளது. அவுஸ்திரேலியாவின் வடக்கு மற்றும் வடமேற்கு பகுதியில் முழு சூரிய கிரகணத்தை அவதானிக்க முடியும். எவ்வாறாயினும், இலங்கை, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு தென்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இன்று விசேட போக்குவரத்து சேவை



சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு சொந்த ஊர் சென்ற மக்கள் மீண்டும் பணியிடங்களுக்கு திரும்புவதற்காக இன்று (17) விசேட போக்குவரத்து சேவைகள் இடம்பெறவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மக்களுக்கு போதிய போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் நேற்று (16) மேற்கொள்ளப்பட்டதாக அதன் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரெண்டா தெரிவித்தார்.

இதேவேளை, இன்று சுமார் 30 ரயில் பயணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. விடுமுறையில் சென்ற ரயில் சாரதிகள் குழுவொன்று பணிக்கு சமூகமளிக்காத காரணத்தினால் பல பிராந்திய ரயில் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், இதன் காரணமாக பயணிகளுக்கு பாரிய பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என மேலதிக புகையிரத பொது முகாமையாளர் வி.எஸ்.பொல்வத்தகே தெரிவித்துள்ளார்.


# நாடு வங்குரோத்து குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா கருத்து



மறைந்த பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருந்தால் நாடு வங்குரோத்து நிலைக்கு சென்றிருக்காது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் 107ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் உள்ள சிறிமாவோ பண்டாரநாயக்கவின் உருவச் சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருந்தால், நாடு திவாலாகி இருக்காது. சிறிமாவோ பண்டாரநாயக்கவின் கொள்கைகளை ஏற்கொண்டிருந்தால் அரசாங்கத்தால் திருட முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் நிலநடுக்கம் குறித்த தகவல்



இலங்கையில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த முடியும் என பணியகம் தெரிவித்துள்ளது. அவ்வாறான வரைபடம் இதுவரை தயாரிக்கப்படவில்லை என பணியகத்தின் சிரேஷ்ட புவியியலாளர் நில்மினி தல்தேன தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டுக்கு முன்னர் நிலநடுக்கம் ஏற்படும் அபாயம் குறைவாக இருந்ததாகவும், இதற்குக் காரணம் நாட்டில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படாதது என்றும் கூறிய அவர், 2004ஆம் ஆண்டுக்குப் பிறகு நிலநடுக்கம் குறித்த தரவுகளைச் சேகரித்து அவற்றைக் கண்காணிப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. இந்த வரைபடம் நில அதிர்வு தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உதாரணமாக, கொழும்பில் நிலநடுக்கம் ஏற்பட்டால், அந்த பகுதியில் நிலநடுக்கம் எப்படி உணரப்படும் என்பதை இந்த வரைபடம் சுட்டிக்காட்டும். இந்த வரைபடம் எதிர்காலத்தில் நிலநடுக்க அபாயத்தைக் குறைக்கும் ஆற்றல் கொண்டது. இந்தியாவிலேயே இதுபோன்ற வரைபடம் தயாரிக்கப்பட்டு, இமயமலைப் பகுதியில் நிலநடுக்கம் அதிகம் ஏற்படுவது தெரியவந்துள்ளது.

இந்த நோக்கத்திற்காக, புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் பல்லேகலை, மஹகனதராவ, ஹக்மன மற்றும் புத்தங்கலவில் நிறுவப்பட்ட நில அதிர்வு நிலப்பரப்புகளிலிருந்து தரவுகள் பெறப்படுகின்றது. மேல் மாகாணத்திலும் நில அதிர்வு அளவினை நிறுவுவது தொடர்பில் புவியியல் ஆய்வுகள் மற்றும் சுரங்கப் பணியகத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# சூடானில் வான்வழித் தாக்குதல்

**சூடான் நாட்டில் இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. இதற்கிடையே அங்கு இராணுவம் - துணை இராணுவம் இடையே மோதல் வெடித்துள்ளது. இரு தரப்பினரும் துப்பாக்கி சண்டை, குண்டு வீச்சில் ஈடுபட்டு வருகிறார்கள். தலைநகர் ஹர்டோமில் உள்ள அதிபர் மாளிகை, சர்வதேச விமான நிலையத்தை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக துணை இராணுவம் தெரிவித்துள்ளது. இதனால் இராணுவத்துக்கும் துணை இராணுவத்துக்கும் இடையேயான மோதல் தீவிரம் அடைந்தது. நாடு முழுவதும் பெரும் கலவரம் பரவியுள்ளது. இந்த மோதலில் இந்தியர் உள்பட 56 பேர் உயிரிழந்தனர். 600க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.**

**இந்த நிலையில் துணை இராணுவ படை தளங்களை குறிவைத்து இராணுவம் வான்வழி தாக்குதல்களை நடத்தியது. அந்த படை தளங்கள் மீது குண்டு வீசப்பட்டன. ஹர்டோமில் உள்ள நைல் ஆற்றின் குறுக்கே துணை இராணுவத்தின் ஆர்.எஸ்.எப். தளம் மீது பீரங்கிகள் மற்றும் போர் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டன. அதேபோல் கூரி, ஷார்க் எல்-நில மாட்டங்களில் துணை இராணுவ தளங்கள் தாக்கப்பட்டன. இதனால் சூடானில் தொடர்ந்து பதற்றம் நீடித்து வருகிறது. இந்த மோதலில் இராணுவத்தின் கை ஓங்கி இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இதற்கிடையே காயம் அடைந்தவர்களை வெளியேற்றுவது உள்ளிட்டவற்றுக்காக மனிதாபிமான அடிப்படையில் ஒரு மணி நேரம் சண்டை நிறுத்தத்துக்கு இராணுவமும், துணை இராணுவமும் ஒப்புதல் அளித்துள்ளது.**

# மண்சரிவு எச்சரிக்கை



நாட்டின் மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. கடந்த (15) இரவு 11 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பதுளை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# அனைத்து அரச நிறுவனங்களும் கோப் குழுவுக்கு!



அனைத்து அரச நிறுவனங்களையும் கோப் குழு முன்னிலையில் அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார். அதன்படி 420 அரச நிறுவனங்களை கோப் குழு முன் அழைக்க தீர்மானித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பிரகாரம், வருடாந்தம் அரச நிறுவனங்களை கோப் குழுவின் முன் அழைக்கவேண்டும் என்ற போதிலும், அது சரியான முறையில் செய்யப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஏப்ரல் மாதத்தில் மேலும் 04 அரச நிறுவனங்கள் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்படவுள்ளன. இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், காணி சீர்திருத்த ஆணைக்குழு, இலங்கை விமான சேவை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பன கோப் குழுவின் முன்னிலையில் அழைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மின்சார ரயில் பாதை அமைக்கத் திட்டம்



உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காகவும், சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்குடனும் நானுஓயா முதல் நுவரெலியா ஊடாக உடபுஸல்லாவ வரை மின்சார ரயில் பாதையை அமைக்க திட்டமிட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நுவரெலியா உள்ளிட்ட மத்திய சுற்றுலாப் பிரதேசத்திலுள்ள இடங்களுக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் மின்சார ரயில் பாதை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் இங்கு குறிப்பிட்டார். அண்மையில் நுவரெலியா பிரதேசத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்ட அமைச்சர் இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இத்திட்டமானது இயக்க மற்றும் பரிமாற்றம் (BOT) முறையின் கீழ் நிர்மாணிக்கப்படும் எனறும், அதற்கு பொருத்தமான முதலீட்டாளர் இணைத்துக் கொள்ளப்படுவர் என்றும் தெரிவித்தார்.

உலகின் ஆறாவது உயரமான புகையிரத நிலையமான கந்தபொல புகையிரத நிலையம் உட்பட பல புகையிரத நிலையங்களை உள்ளடக்கியதாக இந்த புகையிரத பாதை அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், இதனூடாக சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு பாரிய வசதிகள் உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.